## சுருக்கம்

அயலகத் தமிழர் நலன் – தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு – "புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள், இளம் மாணவர்கள் தாய்த் தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணம், ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு அழைத்து வருவதற்கான செலவினமாக ரூ.4,23,00,000/– ஒப்பளிப்பு செய்து ஆணை– வெளியிடப்படுகிறது.

---

பொது (மறுவாழ்வு 2(2))த் துறை

அரசாணை(நிலை)எண். 316

நாள் 19.05.2023.
சோபகிருது வருடம், வைகாசி–5
திருவள்ளுவர் ஆண்டு–2054
படிக்கப்பட்டது:

1. தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண். 074, நாள் 12.01.2023
2. அரசு கடித எண். 997/ம.வா–2(2)/2023–1, நாள் 13.01.2023.
3. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் ஆணையரின் கடித ந.க.எண்.இ1/437/2023, நாள் 11.05.2023 மற்றும் 16.05.2023.

******

ஆணை :

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க அறிவித்த பல்வேறு நலத்திட்டங்களுள் கீழ்க்காணும் அறிவிப்பும் அடங்கும்:–

**"புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள், இளம் மாணவர்கள், தாய்த் தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணம், ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்யப்படும்".**

2. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்கும் முகமாக, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக உரிய கருத்துரு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரிடம் கோரப்பட்டது.

3. மேலே, மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் கீழ்க்கண்ட கருத்துருவினை தெரிவித்து அதனை செயல்படுத்திட ஏதுவாக தொடரும் செலவினமாக ரூ.4,18,00,000/- மற்றும் தொடரா செலவினமாக ரூ.5,00,000/- ஆக மொத்தம் ரூ.4,23,00,000/-ஐ ஒதுக்கீடு செய்துத் தருமாறு அரசினை கோரியுள்ளார்:-

(i) தமிழர்கள் தொன்றுதொட்டு வணிகம், கல்வி, குடியமர்வு, வேலை போன்றவற்றின் பொருட்டு அயல்நாடுகளுக்குச் சென்றுள்ளனர். இவர்களுக்கு அந்நாடுகளின் குடியுரிமை ஏதும் வழங்கப்படுவதில்லை. மேலும், இவர்கள் வேலை நிமித்தம் தங்கள் குடும்பத்தினரை தமிழ் நாட்டிலேயே விட்டு செல்கின்றனர்.

(ii) எனினும், நூற்றாண்டுகளுக்கு முன்பே சங்கத்தமிழர்கள் பல்வேறு காலக்கட்டங்களில் பூம்புகார், கொற்கை, முசிறி, காவிரிப்பூம்பட்டினம் போன்ற துறைமுகங்கள் வாயிலாக வணிகத்திற்காகவும், வணிக வழித்தடங்களை பாதுகாக்கும் பொருட்டு படையெடுப்பின் காரணமாகவும், கிழக்காசிய நாடுகளில் குடியேறியுள்ளனர். மேலும், 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் கிழக்காசிய நாடுகளுக்கு தோட்ட தொழில் செய்திடவும் ஆங்கிலேயர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

(iii) இவ்வாறு அயல்நாடுகளுக்கு சென்றவர்கள், அந்நாட்டில் அங்கேயே குடியுரிமை பெற்று பல தலைமுறைகளுக்கு மேல் அங்கு குடும்பத்தினருடன் வசித்து வருகின்றனர். இவர்கள் அந்நாடுகளின் புவியியல் தன்மையை மேம்படுத்தியதோடு மட்டுமின்றி அந்நாடுகளின் கலாச்சாரம் பொருளாதாரம் மேம்படுத்திடவும் உறுதுணையாக இருந்துள்ளனர். ஒரு சிலர் அந்நாடுகளின் உயர் பதவிகளிலும் தங்களை நிலை நிறுத்தியுள்ளனர்.

(iv) அவர்கள் தமிழர்களாய் இருந்தும் தமிழ் மண்ணின் வேர்களின் தொடர்புகள் அற்று, கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு தொடர்பின்றி வாழ்ந்து வருகின்றனர், இவ்வாறு அயல்நாடுகளில் இரண்டு தலைமுறைகளுக்கு மேல் வசிக்கும் புலம்பெயர்ந்த தமிழர்களின் வாரிசுகள், 18 முதல் 35 வயதிற்கு உட்பட்ட இளநிலை, முதுநிலை, ஆராய்ச்சி படிப்பு பயின்று வரும் மாணவர்கள், அவர்கள் பரவியிருக்கும் நாடுகளில் உள்ள தமிழர்களின் விகிதாச்சார அடிப்படையில் ஆண்டுக்கு 200 இளைஞர்களை தமிழ்நாடு அரசு

இத்துறையின் வாயிலாக தேர்ந்தெடுத்து, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மூலம் தமிழ்நாட்டின் தொன்மை வாய்ந்த பண்பாட்டு தளங்களுக்கு 2 வார கலை / பண்பாட்டு / வரலாற்று சுற்றுலாவிற்கு அழைத்து செல்வது மற்றும் தமிழ் வளர்ச்சி துறை வாயிலாக தமிழ்நாட்டின் முக்கிய பல்கலைகழகங்களுடனான கலந்துரையாடல், கருத்து பரிமாற்றம் போன்றவற்றிற்கான வாய்ப்புகள் ஏற்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டின் பண்டைய கலாச்சாரத்தினையும், தமிழரின் வாழ்வியல் நெறியையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பாக அமையும்.

I. மாணவர்களை தேர்ந்தெடுக்கும் முறை:

- விண்ணப்பதாரர்கள் முதலில் இவ்வாணையரக வலைதளப் பக்கத்தில் (www.nrtamils.gov.in) அவர்களின் விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.

- அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அவர்களின் சந்ததியினருடன் தொடர்புடைய ஆதாரத்தின் அடிப்படையில், PIO/OCI கார்டுகள் அல்லது அவர்களது பெற்றோர் அல்லது மூதாதையர்களின் வேறு ஏதேனும் ஆவணங்கள் மூலம் அவர்களின் தொடர்பை நிரூபிப்பதன் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.

- இது கிடைக்காத பட்சத்தில், அவர்கள் இணைக்கப்பட்டுள்ள அறிவிப்பில் தேவையான விவரங்களை வழங்குவதன் மூலம் அவர்களின் தொடர்பை நிரூபிக்கலாம், மேலும் இது தொடர்பாக தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறையின் ஆணையர் முடிவே இறுதியானது.

- பங்கேற்பதற்கு தேவையான குறைந்தபட்ச தகுதி இளநிலை பட்டதாரி / அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / நிறுவனத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் அல்லது பட்டப்படிப்புக்காக பதிவு செய்திருக்க வேண்டும்.

- அவர்களால் தமிழில் உரையாட முடியவில்லை எனில் ஆங்கிலத்தில் பேசத் தெரிந்திருக்க வேண்டும் / உயர்கல்வி அளவில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படித்திருக்க வேண்டும்.

- பங்கேற்பாளர் 18–30 வயதுக்கு இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

- முதலில் வருபவருக்கு முன்னுரிமை' அடிப்படையில் தகுதியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

- கீழ்க்காணும் நாடுகள், தமிழர்கள் தொன்று தொட்ட காலம் முதல் இடம் பெயர்ந்து வாழ்ந்து வரும் நாடுகள் ஆகும். இவையன்றி தேவையின் / தகுதியின் அடிப்படையில் பிற நாடுகளில் இருந்தும் மாணவர்கள் இணைய

முகப்பில் விண்ணப்பிக்கும் நிலையில் அவர்களையும் இத்திட்டத்தில் இணைத்து ஆண்டிற்கு 200 இளைஞர்களை பயனடைய சேர்த்துக் கொள்ளலாம்.

| வ. எண் | மண்டலம் | தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அ | தென் கிழக்கு ஆசியா மற்றும் கிழக்கு ஆசியா | 80 |
| ஆ | ஆப்ரிக்கா கண்டம் | 20 |
| இ | ஆஸ்திரேலியா மற்றும் ஓசியானியா | 40 |
| ஈ | அமெரிக்க கண்டங்கள் | 20 |
| உ | ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் | 40 |
| | மொத்தம் | 200 |

II. பண்பாட்டு சுற்றுலாவிற்கான பயணத்திட்டம் :

இந்த இரு வார சுற்றுலா திட்டத்தில், மாணவர்கள் தமிழ்நாட்டின் தொன்மை மிகுந்த, கீழ்க்கண்ட பண்பாட்டு சுற்றுலா தலங்களுக்கு அழைத்துச் செல்லுதல். இந்த சுற்றுலா கீழ்க்காணும் பொருள் அடக்கத்தை உள்ளடக்கியதாக அமைத்திடலாம்.

| | | |
|---|---|---|
| 1. | பண்டைய தமிழர்களின் கட்டிடம் / சிற்பக்கலை | அ) மகாபலிபுரம்<br>ஆ)தஞ்சாவூர் – தஞ்சை பெரிய கோவில், சரசுவதி மஹால்<br>இ)மதுரை– மீனாட்சி அம்மன் கோவில்<br>ஈ)திருநெல்வேலி–நெல்லையப்பர் கோவில்<br>உ)செஞ்சி கோட்டை<br>ஊ)திருவண்ணாமலை கோவில்<br>எ)வேலூர் கோட்டை<br>ஏ)தரங்கம்பாடி கோட்டை<br>ஐ)காரைக்குடி செட்டிநாடு அரண்மனை<br>ஒ)கங்கை கொண்ட சோழபுரம்<br>ஓ)காஞ்சிபுரம் |
| 2. | பண்டைய தமிழர்களின் நீர் மேலாண்மை | அ)கல்லணை– திருச்சி<br>ஆ)வீராணம் ஏரி– கடலூர்<br>இ)காளிங்கராயன் அணை –ஈரோடு<br>ஈ)பூம்புகார்–நாகப்பட்டிணம்<br>உ) தூத்துக்குடி – வ.உ.சி. து றைமுகம் |

| | | |
|---|---|---|
| 3. | பண்டைய தமிழர்களின் ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் | அ)காஞ்சிபுரம்<br>ஆ)திருப்புவனம்<br>இ)ஈரோடு<br>ஈ)திருப்பூர் |
| 4. | பண்டைய தமிழர்களின் கலை இலக்கிய பண்பாடு | அ)மதுரை<br>ஆ)தஞ்சாவூர்<br>இ)சிதம்பரம்<br>ஈ)மகாபலிபுரம்<br>உ)குடிமியான் மலை<br>ஊ)சித்தன்னவாசல் |
| 5. | தொல்லியல் ஆய்வுகள் | அ)கீழடி<br>ஆ)அரிக்காமேடு<br>இ)திருவள்ளூர்<br>ஈ)ஆதிச்ச நல்லூர் மற்றும் இதர இடங்கள் |

III. அறிஞர்கள்/ சான்றோர்களுடன் கலந்துரையாடல்:

(i) இதனை தொடர்ந்து அழைத்துவரப்படும் மாணவர்கள் மேற்படி ஆய்வுகள் தொல்லியல் துறைகள் தவிர்த்து தமிழ் பண்பாடு, தமிழ் வரலாற்று ஆராய்ச்சி, கல்வெட்டுகள் குறித்த ஆராய்ச்சி, நாட்டுபுறக் கலைகள் நடனம் மற்றும் தமிழிசை மன்றங்கள், பாசறைகள் போன்றவற்றிக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

(ii) தமிழ்நாட்டின் கலை, இலக்கியம் பற்றிய அறிமுகத்தினை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் விதமான நிகழ்ச்சிகளும், இங்குள்ள பல்கலைக்கழகங்கள் உடனான கலந்துரையாடல்களும் ஏற்பாடு செய்யப்படும் மற்றும் பயணங்கள் முடிவடையும் தருவாயில் இம்மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கியும், அடுத்த ஒரு வருட காலத்திற்கு தமிழ்நாட்டு நாகரீகம், பண்பாடு போன்றவற்றிற்கு அவர்கள் சார்ந்துள்ள நாடுகளில் உள்ள பிற கல்லூரிகள், பிற பல்கலைக்கழகங்கள் குறிப்பாக அடுத்த தலைமுறையினருக்கு இவற்றினை கொண்டு செல்லும் "கௌரவ தூதுவர்"களாக அங்கீகாரம் செய்யலாம். மேலும் தொடரும் ஓராண்டு காலத்திற்கு இவர்கள் தங்களது மேற்படி பொருள் தொடர்பான விவரங்களை அறிக்கை வடிவில் சமர்ப்பிக்க கோரலாம்.

(iii) இத்திட்டத்தில் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளவும், மாணவர்களை தேர்வு செய்வதிலும் அயலகத் தமிழர் நலத் துறைத் தலைவருக்கு முழு அதிகாரம் வழங்கப்படலாம்.

IV. பண்பாட்டு சுற்றுலாவிற்கான செலவினம்:–

மாணவர்கள் அயல்நாடுகளிலிருந்து தமிழ்நாடு வந்து செல்வதற்கான பயணக் கட்டணம், விசா கட்டணம் போன்றவை அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தால் ஏற்கப்படும் என்றும், மேலும், மாணவர்கள் தமிழ்நாட்டில்

இருக்கும் இரண்டு வார காலத்திற்கான தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகளும் "தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டு கழகம்" மூலம் இத்துறையால் செய்து தரப்படும் என்றும், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், இத்திட்டத்திற்கான செலவின விவரம் பின்வருமாறு தெரிவித்து அதற்கான ஆணையினை வழங்குமாறு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

அ) தொடர் செலவினம்

| வ.எண் | பொருள் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | 200 சர்வதேச விமான கட்டணம் | 2,15,00,000 |
| 2 | சுற்றுலாவிற்கான செலவினம் (தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திடமிருந்து பெறப்பட்டது) | 1,45,00,000 |
| 3 | தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள்/ குறுகிய கால பயிற்சி பட்டறை உடனான சந்திப்பு | 10,00,000 |
| 4 | நினைவு பரிசுகள் / Honorarium | 2,00,000 |
| 5 | VISA கட்டணம் | 30,00,000 |
| 6 | இதர செலவினம் / பயண காப்பீடு | 6,00,000 |
| 7. | குறும்படம் | 10,00,000 |
| | மொத்தம் | 4,18,00,000 |

ஆ) தொடரா செலவினம்

| வ. எண் | பொருள் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | இணையதள உருவாக்கம் | 5,00,000 |

மொத்தம் (அ+ஆ)

| வ.எண் | தொடர் + தொடரா செலவினம் (ரூ.) | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | 4,18,00,000/- + 5,00,000/- | 4,23,00,000/- |

V. இளைஞர்களின் பங்களிப்பு:

மேற்காணும் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை (Guidelines) பின்பற்றப்படும் என்றும், மேலும் இத்திட்டத்தில் ஓராண்டு காலத்திற்கு இவர்கள் தங்களது மேற்படி பொருள் தொடர்பான விவரங்களை காலாண்டு அறிக்கை

வடிவில் சமர்ப்பிக்க கோரலாம் என்றும், இந்த பயணம் மேற்கொள்ளும் மாணவர்கள் வாயிலாக அந்நாட்டில் வசிக்கும் தமிழ் பெருங்குடியினரின் விவரங்களை சேகரிக்கவும், அவ்விவரங்களை மேம்படுத்திடவும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்றும், இதற்கென ஒரு உறுதிமொழிப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

4. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்தபின், அதனை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 12-01-2023-ஆம் நாளிட்ட செய்தி வெளியீட்டில் (செய்தி வெளியீடு எண்.074) அறிவித்துள்ள திட்டத்தினை செயல்படுத்துவதற்காக அதற்கான தொடரும் செலவினமாக ரூ.4,18,00,000/-(ரூபாய் நான்கு கோடியே பதினெட்டு இலட்சம் மட்டும்) மற்றும் தொடரா செலவினமாக ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.4,23,00,000/- (ரூபாய் நான்கு கோடியே இருபத்தி மூன்று இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:

> **"2235 சமூகப்பாதுகாப்பும் நலனும் - 01 மறுவாழ்வு -800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் -AJ புலம்பெயர்ந்த தமிழ் இளைஞர்களுக்கான தமிழக அரசின் கலாச்சார சுற்றுலா திட்டம் 354 திட்டமிட்ட பயணங்கள் குறித்த செலவு - 01 திட்டமிட்ட பயணங்கள் குறித்த செலவு (த. தொ.கு.2235 - 01 - 800 - AJ 35401) - ரூ.4,18,00,000/- 381 வலைபின்னல் மற்றும் இணைப்புகள் - 01 வலைபின்னல்.(த.தொ.கு.2235 - 01 - 800 - AJ 38101) - ரூ.5,00,000/-**

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.பொ.I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்துவரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-இல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித் (வ.செ.பொ.I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில்

நிதித் (பொது / வ.செ.பொ.I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 5-இல் தோற்றுவிக்கப்பட்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். மேற்படி புதிய கணக்குத் தலைப்பை தங்களது பதிவேடுகளில் துவக்கிக் கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதி(பொது)த் துறையின் அ.சா.எண்.70/ து.செ(வ.செ)/நிதி (வ.செ.பொ.II)/2023, நாள். 19.05.2023 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. (இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண் 137 (நூற்று முப்பத்தி ஏழு). (IFHRMS ASL No.2023050137)

(ஆளுநரின் ஆணைப்படி)

டி.ஜகந்நாதன்
அரசுச் செயலாளர் (மு.கூ.பொ.,)

பெறுநர்
ஆணையர்,
அயலக தமிழர் நலன் மற்றும்
மறுவாழ்வுத் துறை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5.
முதன்மைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை – 600 009.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-5.
நகல்
மாநில கணக்காயர், சென்னை-18.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சிறப்பு நேர்முகக் உதவியாளர்,
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அலுவலகம்
நிதி(பொது/வ.செ.பொ.I/II/வ.வ.I)த் துறை, சென்னை-9.
பொது(ம.வா.I/III)த் துறை, சென்னை-9.
பொது(அ.ந.மு.1)த் துறை, சென்னை-9.
பொது(பல்வகை)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

19/5/2023
பிரிவு அலுவலர்
19/5/2023